

ஆரம்பகட்ட மன நல சுகாதாரப் பாராமரிப்புச் சேவைகளை, ஆஸ்திரேலிய அரசின்_ PHN திட்டம் வாயிலாகவும், பிரிஸ்பேன் நார்த் PHN மற்றும் பிரிஸ்பேன் சவுத் PHN இல் இருந்து கிடைக்கிற நிதியைக் கொண்டும், மற்றும் மன நல ஆரோக்கிய சமுதாய ஆதரவுச் சேவைகள் நிதியளிப்புத் திட்டம் வாயிலாக, குயீன்ஸ்லாந்து சுகாதாரத் துறை நடத்தும், கல்சர் இன் மைண்டு சேவைகள் வாயிலாகவுமே நடத்துகிறோம்.

**Quality Certified** Service

# எங்களைத் தொடர்புகொள்ள

## எவ்விதம் உதவி பெறுவது

உங்களுக்கு உதவி தேவையென்றால், தயவுசெய்து (07) 33332100 அழைத்து மன நல சுகாதாரத் திட்ட மேலாளரிடம் பேச வேண்டும் என்று சொல்லுங்கள்.

நாங்கள் கிடைக்கவில்லை என்றால், தயவுசெய்து ஒரு செய்தியை விட்டுச் செல்லுங்கள், கூடிய விரைவில் நாங்கள் உங்களைத் திரும்பக் கூப்பிடுவோம். நாங்கள் உங்களைத் திரும்பக் கூப்பிட்டு, மொழிபெயர்ப்பாளர் ஒருவரைக் கொண்டு உங்களோடு பேசுவோம்.

உங்களுடைய மொழியிலேயும் நீங்கள் மின்னஞ்சல் அனுப்பலாம்:

mentalhealth@worldwellnessgroup.org.au

World Wellness Group

33 Stoneham Street
Stones Corner Qld 4120
Ph: (07) 3333 2100
Fax: (07) 3397 1358
ABN 95154368804

World Wellness Clinic



# மன நலம் & நலச் சேவை

(07) 3333 2100

worldwellnessgroup.org.au

## உங்களுக்குத் துணைபுரிவதற்கான சேவைகள்

வேர்ல்டு வெல்னஸ் சிகிச்சைமையத்தில், நாங்கள் உங்களது உடல் மற்றும் மன ஆரோக்கியத்தைக் கவனித்துக் கொள்கிறோம். அதோடு நாங்கள் உங்களது மொழி, கலாச்சாரம் மற்றும் மதம் குறித்தும் கவனமெடுத்துக் கொள்கிறோம்.

எங்களிடம் சமுதாயம் சார்ந்த, உணர்வுகள் சார்ந்த மற்றும் மன நலம் சார்ந்த ஆதவைக் கிடைக்கச் செய்வதற்கான மூன்று திட்டங்கள் கிடைக்கின்றன.

அதோடு நாங்கள், உங்களது மன நல ஆரோக்கியத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகிற நடைமுறைப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளவும் உதவுகிறோம்.

எங்களது சேவைகளை, சான்றுபெற்ற மன நல ஆரோக்கிய நிபுணர்களே வழங்குகிறார்கள், அதோடு அவை முற்றிலும் இரகசியமானவையாகும். உங்கள் அந்தரங்கத்திற்கு நாங்கள் மதிப்பளிக்கிறோம்.



எங்களது சேவைகள் கட்டணமில்லாதவையாகும்.

## எங்களது திட்டங்கள்

### கல்சர் இன் மைண்டு

இந்தத் திட்டம், நடைமுறையிலான ஆதரவுகள் தேவைப்படுகிற, அதிகச் சிக்கலான மனநலப் பிரச்சினைகளுள்ளவர்களுக்கானதாகும். இது, உணர்வு ரீதியிலானதும், சமுதாய ரீதியிலானதுமான ஆதரவைத் தருகிறது. நாங்கள், உங்களது குறிக்கோள்கள் மற்றும் மீட்சி, சமுதாயத் தொடர்புகள் மற்றும் உங்களது மன நல ஆரோக்கியம் மற்றும் நல வாழ்வைப் பாதிக்கிற பிரச்சினைகளிலும் உங்களுக்குத் துணைபுரிகிறோம்.

### பன்கலாச்சார மனோவியல் சிகிச்சைகள் திட்டம்

இது, மனோவியல் சிகிச்சை தருகிற மன நல சுகாதார நிபுணர்களோடு உங்களை இணைக்கிறதோர் திட்டமாகும். இது, பதற்றம், மன அழுத்தம் போன்ற, இலேசானது முதல் மிதமானது வரையிலான, மன நலப் பிரச்சினைகளுள்ளவர்களுக்கானதாகும். உங்களது ஒப்புதலோடு கூட, எங்களால், உங்களது கலாச்சாரப் பின்னணியம் கொண்டுள்ள (கிடைப்பாரானால்) உங்களையொத்த ஒரு ஊழியரைக் கொண்டு உங்களுக்கு உதவி புரிய, உங்கள் மொழியில் பேச, நடைமுறையையும், சிகிச்சையையும் உங்களுக்கு விளக்கிச் சொல்லவும், மன நல ஆரோக்கிய நிபுணரிடம் உங்களது கலாச்சாரத்தை விளக்கிச் சொல்ல உதவவும் முடியும்.

### *PM Plus*

இது, பிரச்சினைகளைத் தீர்க்கவும், சிகிச்சைக்கு இணங்கிச் செல்லும் உங்களது திறன்களை அதிகரிக்கவும் வடிவமைத்துள்ள, நடைமுறையிலானதோர் திட்டமாகும். கட்டமைத்த ஆதரவுத் திட்டம் கவனம் செலுத்துவது:

உங்களது மன நெருக்கடியைச் சமாளிப்பது
உங்களது ஊக்கத்தைக் கண்டுணர்ந்து, தக்கவைப்பது
உங்களது சமுதாய ஆதரவுகளை வலுப்படுத்துவது
தொடர்ந்து நலமுடன் இருப்பது



## உங்கள் கலாச்சாரம், மொழி மற்றும் மத நம்பிக்கைகளுக்கு நாங்கள் மதிப்பளிக்கிறோம்.

உங்கள் கலாச்சாரம், மொழி மற்றும் மத நம்பிக்கைகளுக்கு நாங்கள் மதிப்பளித்து மரியாதை செய்கிறோம்.

நீங்கள் உங்களது மொழியிலேயே பேச விரும்புவீர்கள் என்பதை நாங்கள் புரிந்து கொள்கிறோம், ஆகவே உங்களுடன் பேச ஒரு மொழிபெயர்ப்பளரையோ அல்லது கிட்டத்தட்ட 50 க்கும் மேற்பட்ட காலாச்சாரப் பின்னணியங்களில் இருந்து வந்து, 60 மொழிகளுக்கும் மேல் பேசுகிற, எங்களது பன்கலாச்சார சமவயது ஆதரவுப் பணியாளர்களில் ஒருவரையோ ஏற்பாடு செய்வோம்.

எங்களது, சான்றுபெற்ற மன நல சுகாதார சிகிச்சையளிப்பவர்களில் அநேகர், கலாச்சார ரீதியாகவும், மொழியியல் ரீதியாகவும் வித்தியாசமான பின்னணியங்களில் இருந்து வருபவராவர்.

நாங்கள், உங்களோடு தொடர்பு கொள்வதை எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம்.